TNVL010044822023



**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்), வேலூர்.**
**வேலூர் மாவட்டம்.**

**முன்னிலை : திரு.P.V.சாண்டில்யன், M.L.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி (விரைவு நீதிமன்றம்)
வேலூர்.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் நாள், செவ்வாய்கிழமை

**அமர்வு வழக்கு எண்.167/2023**

| | | |
|---|---|---|
| 1. | குற்றம் முறையிடுபவர் | அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>சத்துவாச்சாரி காவல் நிலையம்.<br>குற்ற எண்.191/2019 |
| 2. | எதிரிகள் | 1. யுவராஜ் (24/2019),<br>த/பெ.அருணாச்சலம்,<br>எண்.23/C, விஜயராகவபுரம்,<br>சத்துவாச்சாரி, வேலூர்.<br><br>2. பிரபு (24/2019), த/பெ.அர்ஜூனன்<br>எண்.50/A, பிராமினர் தெரு,<br>சத்துவாச்சாரி, வேலூர்.<br><br>3. கிரிதரன் (21/2019), த/பெ.தயாளன்<br>எண்.15/A, கோல்டன் நகர்,<br>சத்துவாச்சாரி, வேலூர்.<br><br>4. கணேசன் (20/2019), த/பெ.ஜெயகுமார்<br>எண்.52, நேதாஜி நகர்,<br>சத்துவாச்சாரி, வேலூர்–9.<br><br>5. பொன்முடி (48/2019),<br>த/பெ.விஜயரங்கன்<br>எண்.16, 3 வது தெரு, விஜயராகவபுரம்,<br>சத்துவாச்சாரி, வேலூர். |

| | | |
|---|---|---|
| | | 6. விச்சு (எ) தினேஷ் (33/2019), த/பெ.சிவானந்தம் எண்.96/41, மடம் தெரு, சத்துவாச்சாரி, வேலூர். |
| 3. | முறையிடப்பட்ட குற்றம் | 1 முதல் 6 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 302, 120(B), 294(b), 506(ii)ன் வழக்கு பதியப்பட்டுள்ளது. |
| 4. | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | 1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 302 r/w 120(B), 148, 302, 506(2)ன் கீழும், 5 மற்றும் 6 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 302 r/w 120(B), 148, 302 ன் கீழும் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| 5. | எதிரியின் பதில் | குற்றச்சாட்டுகள் மறுக்கப்பட்டது. |
| 6. | நீதிமன்றத்தின் தீர்மானம் | குற்றவாளி அல்லர். |
| 7. | தீர்ப்பும் தண்டனையும் | ***முடிவில், 1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 302 r/w 120(B), 148, 302, 506(2)ன் கீழும், 5 மற்றும் 6 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 302 r/w 120(B), 148, 302 ன் கீழும் குற்றவாளி அல்லர் என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும், எதிரிகள் ஏதேனும் பிணை முறிவு பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தால் இத்துடன் ரத்தாகிறது. இவ்வழக்கில் மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவிற்கு ஏற்பவோ அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்*** |

| | | |
|---|---|---|
| | | ***இவ்வழக்கில் சா.பொ.1 முதல் சா.பொ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பொருட்களை அழிக்க உத்தரவிடப்படுகிறது.*** |
| 8. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.A.அறிவரசன், கூடுதல் அரசு பொது வழக்கறிஞர் |
| 9. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | 1 முதல் 4 மற்றும் 6ம் எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.H.யாசிர் முகமது இர்பாத் அவர்களும், 5ம் எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாலாஜி அவர்களும் முன்னிலையானார்கள். |
| 10. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த காலம் | 1ம் எதிரி 24.04.2019 – 23.11.2019<br>2ம் எதிரி 24.04.2019 – 02.11.2019<br>3ம் எதிரி 24.04.2019 – 09.07.2019<br>4ம் எதிரி 24.04.2019– 17.07.2019<br>5ம் எதிரி 06.05.2019 – 09.07.2019<br>6ம் எதிரி 24.08.2019 – 23.11.2019 |
| 11. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 19.02.2020 |
| 12. | முதல் நிலை பதிவேட்டு விசாரணை முடிந்து மேல் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | 14.03.2023 |
| 13. | குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றம் பற்றி வினவப்பட்ட நாள் | 24.10.2024 |

<table>
<tr><td>14.</td><td>தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம்</td><td colspan="3">இல்லை.</td></tr>
<tr><td rowspan="15">15.</td><td rowspan="15">அரசுதரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிள்</td><td>மு.வி</td><td>கு.வி.</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>06.08.2025</td><td>06.08.2025</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>06.08.2025</td><td>06.08.2025</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>06.08.2025</td><td>06.08.2025</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>06.08.2025</td><td>06.08.2025</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>11.08.2025</td><td>11.08.2025</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>01.09.2025</td><td>01.09.2025</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>10.11.2025</td><td>--</td></tr>
<tr><td>அ.சா.8</td><td>17.11.2025</td><td>17.11.2025</td></tr>
<tr><td>அ.சா.9</td><td>17.11.2025</td><td>17.11.2025</td></tr>
<tr><td>அ.சா.10</td><td>24.11.2025</td><td>24.11..2025</td></tr>
<tr><td>அ.சா.11</td><td>20.01.2026</td><td>20.01.2026</td></tr>
<tr><td>அ.சா.12</td><td>20.01.2026</td><td>20.01.2026</td></tr>
<tr><td>அ.சா.13</td><td>21.01.2026</td><td>20.01.2026</td></tr>
<tr><td>அ.சா.14</td><td>04.08.2026</td><td>04.08.2026</td></tr>
<tr><td>16.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்.</td><td colspan="3">07.08.2026</td></tr>
<tr><td>17.</td><td>தலைமறைவு எதிரி பற்றிய விவரம்</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>18.</td><td>மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றி விவரங்கள்</td><td colspan="3">தடை உத்தரவு இல்லை.</td></tr>
</table>

இவ்வழக்கு வேலூர் முதன்மை அமர்வு நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண்.167/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் மாண்புமிகு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றத்தின் விடுவி. எண்.7182/2023/Tr., 12.07.2023 தேதியிட்ட உத்தரவு படி இந்த வழக்கு இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, இந்நீதிமன்ற கோப்பில் சேர்க்கப்பட்டு, என் முன்பாக 07.08.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுதரப்பில், கற்றறிந்த கூடுதல் அரசு பொது வழக்கறிஞர் திரு.A.அறிவரசன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 மற்றும் 6ம் எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.H.யாசிர் முகமது இர்பாத் அவர்களும், 5ம் எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாலாஜி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் வந்ததில் இதுநாள் வரையில் என் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## **தீர்ப்புரை**

1. **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**:–

இவ்வழக்கில் கடந்த 2018ம் ஆண்டு 6ம் எதிரி வந்த காரில் வசூர் ராஜாவின் கூட்டாளியான இறந்த செல்வராஜ் வெடிகுண்டு வீசிய காரணத்தால் இருதரப்பினருக்குமிடையே இருந்து வந்த முன்விரோதம் காரணமாக, இவ்வழக்கின் சம்பவ தேதியான 20.04.2019 அன்றும் அதற்கு 10 நாட்களுக்கு முன்பாகவும், காலை மற்றும் மாலையில் 1 முதல் 6 எதிரிகள் சத்துவாச்சாரி மற்றும் சில இடங்களில், கைபேசி வாயிலாகவும், நேரிலும் செல்வராஜை கொலை செய்வதற்கு குற்றமுறு சதித்திட்டம் தீட்டி, 20.01.2019 அன்று இரவு 8.00 மணிக்கு சத்துவாச்சாரி கெங்கையம்மன் கோயில் அருகே இறந்த செல்வராஜ் சாட்சிகள்

லோகேஷ் மற்றும் பாஸ்கருடன் பேசிக்கொண்டிருந்தபோது, 3ம் எதிரி கொடுத்த தகவலின் பேரில் 1, 2 மற்றும் 4ம் எதிரிகள் 3ம் எதிரியுடனும், மற்றும் வாகனங்களுடன் 5 மற்றும் 6ம் எதிரிகளும் சேர்ந்து செல்வராஜை கொலை செய்யவேண்டும் என்ற பொதுவான எண்ணத்துடன் கத்தி மற்றும் இரும்பு பைப்பு போன்ற அபாயகரமான ஆயுதங்களோடு இருச்சக்கர வாகனத்தில் சென்று, 3ம் எதிரி இறந்துபோன செல்வராஜை இரும்பு பைப்பால் முதுகில் அடித்தும், பின்னர் செல்வராஜ் வலி தாங்காமல் ரோட்டின் வடக்கு பக்கத்திலிருந்து தெற்கு பக்கமாக ஓட ஆரம்பித்தவரை 1 முதல் 4 எதிரிகள் கையில் வைத்திருந்த இரும்பு பைப்பாலும், கத்தியாலும் செல்வராஜை மாறிமாறி அடித்து வெட்டிக்கொண்டு துரத்திச்சென்று, இரவு 8.15 மணிக்கு ஆவீன் பால் பண்ணை கேட்டின் உள்ளே நுழைந்த செல்வராஜை 3 மற்றும் 4ம் எதிரிகள் கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் மாறிமாறி அடித்தபோது, அதை செல்வராஜ் உடம்பின் மீது படாமல் அவரது இரு கைகளால் தடுத்ததாகவும், 1 மற்றும் 2 எதிரிகள் கத்தியால் செல்வராஜின் கைகள், முகம், தலை மற்றும் காது மீது மாறி மாறி வெட்டி செல்வராஜிற்கு இறப்பை ஏற்படுத்தியதாகவும், மேலும் 5ம் எதிரி 1ம் எதிரியை அவரது TN 23 AR 7116 என்ற எண் கொண்ட இருச்சக்கர வாகனத்தில் ஏற்றிச் சென்றும், 6ம் எதிரி, 1ம் எதிரியை அவரது காரில் ஏற்றி தப்பிச்செல்ல உடந்தையாய் இருந்து செயல்பட்டதாகவும், எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 302, 120(B), 294(b), 506(ii)ன் கீழ் சத்துவாச்சாரி காவல் நிலைய காவல் ஆய்வாளர் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்த வழக்கின் இறுதி அறிக்கையை பரிசீலனை செய்த நடுவர் நீதிமன்றம் எண்.5, வேலூர், நடுவர் நீதிபதி அவர்கள் முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.4/2020 ஆக கோப்பிற்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் எதிரிகளுக்கு கு.வி.மு.ச.பிரிவு 207ன் படி வழங்கப்படவேண்டிய வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தையும் இலவசமாக வழங்கிய பின்னர் இந்த வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் மாண்புமிகு வேலூர் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு பணிந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்ததில் அந்த வழக்கு அமர்வு வழக்கு எண்.167/2023 ஆக கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

3. பின்னர் மாண்புமிகு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றத்தின் விடுவி. எண்.7182/2023/Tr., 12.07.2023 தேதியிட்ட உத்தரவு படி இந்த வழக்கு இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, இந்நீதிமன்றம் இந்த வழக்கை தொடர் விசாரணைக்கு எடுத்து கொண்டு இருதரப்பு வாதங்களையும் கேட்டு தீர்ப்பு வழங்கப்படுகிறது.

4. இவ்வழக்கில் அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.14 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.28 வரையான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 முதல் சா.பொ.12 வரையிலான சான்று பொருள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் இருந்து புலனாகும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கமாவது:-**

(i) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 ஆண்டாள் தனது சாட்சியத்தில், தனது கணவர் புகார்தாரர் கோவிந்தன் 2 வருடங்களுக்கு முன்பு உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டதாகவும், 20.04.2019 அன்று எதிரி கணேஷ் தனது மகன் செல்வராஜை வீட்டிலிருந்து கூப்பிட்டதாகவும், மாலை 1 மணி நேரம் கழித்து தனது மகனை வெட்டிவிட்டதாக இளைய மகன் ரமேஷ் பார்த்து வந்து சொன்னதாகவும், தானும், தனது மகன், தனது கணவர் பால்பண்ணை கேட்டிற்கு வந்து பார்த்தபோது, வெட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் இருந்த தனது மகனை பார்த்து யார் இந்தமாதிரி செய்தது என்று கேட்டதற்கு எதிரி யுவராஜ் தான் தன்னை வெட்டியதாக சொன்னதாகவும், உடனே ஆம்புலன்சில் ஏற்றி அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், தனது கணவர் இதுசம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், போலிசார் தன்னை விசாரணை செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

(ii) அ.சா.2 ரமேஷ் தனது சாட்சியத்தில், 20.04.2019 அன்று மாலை 08.15 மணிக்கு தான் வீட்டிலிருந்து பால்பண்ணை ரோட்டில் கூட்டமாக இருந்ததை தான் போய் பார்த்தபோது தனது அண்ணன் செல்வராஜ் வெட்டுக்காயம்பட்டு இரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக்கொண்டிருந்தார் என்றும், தான் தனது அம்மா, அப்பாவிற்கு போன் மூலம் தகவல் சொல்லி அவர்கள் வந்தார்கள், தாங்கள் தனது அண்ணன் செல்வராஜை விசாரித்தபோது யுவராஜ் தன்னை கத்தியால் வெட்டியதாக சொல்லி கொஞ்ச நேரத்திலேயே இறந்துவிட்டார் என்றும், ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாகவும், தனது

அப்பா கோவிந்தன் புகார் கொடுத்ததாகவும், சம்பவத்திற்கு 2 நாட்கள் முன்பாக பிரபு, யுவராஜ் கணேசன் வீட்டிற்கு வந்து தன்னிடம் தனது அண்ணன் செல்வராஜை ஒழுங்காக இருக்கச்சொல் இல்லையென்றால் அவன் சாவு எங்கள் கையில் என்று சொன்னதாகவும், சம்பவத்திற்கு 10 நாட்களுக்கு முன்பாக பால்பண்ணைக்கு எதிரே உள்ள பொன்முடி கோழிகடையில், யுவராஜ் மற்றுமுள்ள 4 எதிரிகளும் செல்வராஜ் அடிக்கடி பிரச்சினை செய்கிறான் அதனால் செல்வராஜை போட்டுத்தள்ள வேண்டும் என்று பேசியதை தான் கேட்டதாகவும், போலிசார் தன்னை விசாரணை செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

(iii) அ.சா.3 பாஸ்கர் தனது சாட்சியத்தில், இறந்த செல்வராஜையோ, எதிரிகளையோ தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், நீதிமன்றத்திலிருந்து சம்மனை போலிசார் கொடுத்தபிறகுதான் என்ன விவரம் என்று தெரிந்துகொண்டதாகவும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்று பிறழ்சாட்சியமளித்துள்ளார்.

(iv) அ.சா.4 குமரன் தனது சாட்சியத்தில், எதிரி பொன்முடி தனது மாமனார் வீட்டினருகே மளிகை கடை வைத்துள்ளதாகவும், இறந்துபோன செல்வராஜ் தனது மச்சான் என்றும், இவ்வழக்கைப்பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது என்றும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்று பிறழ்சாட்சியமளித்துள்ளார்.

(v) அ.சா.5 கணேசன் தனது சாட்சியத்தில், தான் பாதுகாவலராக ஆவின் பால்பண்ணையிலிருந்தபோது மெயின்ரோடு ஓரத்தில் ஒரு நபர் விழுந்து கிடந்தவரை ஒரு நபர் கட்டையால் அடித்துக்கொண்டிருந்ததை பார்த்து சத்தம்போட்டும் அடித்துக்கொண்டிருந்தவர் போகவில்லை என்றும், அடித்துக்கொண்டிருந்த நபர் முகமூடி அணிந்திருந்ததாகவும், இரவு 12.00 மணிக்கு சத்துவாச்சாரி போலிசார் வந்து சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.த.சா.ஆ.1 தயார் செய்ததாகவும், அதில் தானும் குமரனும் கையெழுத்து செய்ததாகவும், பின்னர் சம்பவயிடத்திலிருந்து ரத்தம் தோய்ந்த மண், ரத்தம் தோய்ந்த சிமென்ட் சாலை உடைத்த மண் அந்த ரத்தக்கறையை பஞ்சில் துடைத்து சேகரித்து கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.2 ல் கைப்பற்றியதாகவும், போலிசார் தன்னை விசாரணை செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

(vi) அ.சா.6 விஜயகுமார் தனது சாட்சியத்தில், எதிரிகளை தனக்கு தெரியாது, பிரபு மற்றும் வீச்சு (எ) வீச்சு தினேஷை தெரியாது என்றும், இந்த வழக்கில் ஒரு நபர் வெட்டிக்கொலை செய்யப்பட்டு இறந்தார் என்று தெரியும் அவர் எப்படி இறந்தார் என்று தெரியாது, இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்று பிறழ்சாட்சியமளித்துள்ளார்.

(vii) அ.சா.7 அசோக் குமார், துணை இயக்குனர் (வட்டார தடய அறிவியல் ஆய்வகம், வேலூர்), தனது சாட்சியத்தில், கடந்த 23.04.2019 அன்று தான் பணியிலிருந்தபோது, சத்துவாச்சாரி காவல் நிலைய குற்ற எண்.191/2019 வழக்கில் இறந்துபோன செல்வராஜ் வயது 35 என்பவரது

உடல் உள் உறுப்புகள் பேராசிரியர் சட்டம் சார்ந்த மருத்துவம் வேலூர் அரசு மருத்துவ கல்லூரி அவர்களிடமிருந்து பெற்று அவற்றை 30.04.2019 அன்று ஆய்வு செய்யப்பட்டதாகவும், மேலும் இவ்வழக்கில் பிரேத பரிசோதனையின் போது சேகரிக்கப்பட்ட மாதிரி இரத்தம் 26.04.2019 அன்று ஆய்வகத்தில் பெறப்பட்டு குருதி வடிநீரியியல் ஆய்வுக்காக தடய அறிவியல் துறை சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும், மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மாதிரி பொருட்கள் நீதிதுறை நடுவர் எண்.5 வேலூர் அவர்களிடமிருந்து 03.05.2019 அன்று ஆய்வகத்தில் பெறப்பட்டு 14.05.2019 அன்று ஆய்வு செய்யப்பட்டது என்றும், பொருள் எண்.1 அடர் பழுப்பு கரையுடன் கூடிய சிமெண்ட் காரைத் துண்டுகள் பொருள் எண்.2 சாதா சிமெண்ட் காரைத் துண்டுகள், பொருள் எண்.3 அடர் பழுப்பு கரையுடன் கூடிய காஸ் துணி என்று சாட்சியமளித்துள்ளார்.

(viii) அ.சா.8 திருமதி கலைச்செல்வி, (சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் மூத்த உதவி பேராசிரியராக மற்றும் தலைமை பொறுப்பு, வேலூர்) தனது சாட்சியத்தில், கடந்த 21.04.2019 பணியில் இருந்தபோது சத்துவாச்சாரி காவல் நிலைய குற்ற எண்.191/2019 சம்மந்தமான ஆண் பிரேதம் வயது 35 பிரேதத்தினை காவலர் 2605 வெங்கடேசன் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டு அதே நாள் பிற்பகல் 01.45 மணியளவில் பிரேத கூறாய்வு செய்ததாகவும், **புற ஆய்வு** மரண விரைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது, உலர்ந்த ரத்த கறைகள் முகம் ,மார்பு பகுதி, கைகள் மற்றும் கால் பகுதிகளில் ஆங்காங்கே காணப்பட்டன, இறப்பிற்கு முன் ஏற்பட்ட வெளிப்புற காயங்கள் பின்

வருமாறு. 1. செம்பழுப்பு நிற சிராய்ப்புகள் அ .4.2 X 3.1 செ.மீ. தாடையின் வலது புறத்திலும் ஆ.6.1X2.8 செ,மீ இடது தோள்பட்டையிலும் இ.3.5X1.8 செ.மீ. முதுகின் பின் புறத்திலும் காணப்பட்டன, 2.வெட்டுக் காயங்கள் அ)நீள்வாக்கில் அமைந்த எலும்பு வரை ஆழத்திலுள்ள சுமார் 11.2X1.2 செ.மீ. அளவில் தலையின் மேல் பகுதியில் இடது பிறத்திலும் ஆ)குறுக்காக அமைந்த எலும்பு வரை ஆழத்திலுள்ள சுமார் 13.5X3.8 செ.மீ அளவில் முகத்தில் இடது புறத்தில் காணப்பட்டது. இக்காயமானது இடது புற கண்கள் மூக்கு மற்றும் இடது கண்ணம் இடது காது வரை நீண்டிருந்தது. இ)குறுக்காக அமைந்த எலும்புவரை ஆழத்திலுள்ள சுமார் 12.2X3.1 செ.மீ. கீழ் தாடையில் இடது புறத்தில் காணப்பட்டது. மேலும் தாடையில் வெட்டு முறிவினை ஏற்படுத்தியிருந்தது. ஈ)சாய்வாக அமைந்த எலும்பு வரை ஆழத்திலுள்ள சுமார் 11.5X4.3 செ.மீ. அளவில் வலது கையில் முன்புறத்தில் காணப்பட்டது. உ)சாய்வாக அமைந்த தசை வரை ஆழத்திலுள்ள சுமார் 7.5X1.8 செ.மீ. இடது கை முட்டியின் பின் புறத்தில் காணப்பட்டது. காயத்தின் விளிம்புகள் கன்றி காணப்பட்டன, 3. சிதைந்த மற்றும் முறிந்த காயமானது இடது முழங்கையில் காணப்பட்டது. மேலும் காயத்தின் விளிம்புகள் சீரற்று கிழிந்தும் கன்றியும் காணப்பட்டது. மேலும் காயத்தின் கீழாக அமைந்த தசைகள் மற்றம் எலும்புகள் முறிந்து காணப்பட்டது என்றும், **அக ஆய்வு** தலைப்பகுதியில் கூறாய்வு செய்ததில் கபாலத்தில் இடது புறத்தில் வெட்டு முறிவு காணப்பட்டது, மேலும் கூறாய்வு செய்கையில் மூளை இயல்பாகவும் பிளந்து பார்த்ததில் வெளிறியும் காணப்பட்டது, உள்ளுறுப்புகள் ரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு மது உள்ளது என அறிக்கை பெறப்பட்டன, மதுவின் அளவும் குறிப்பிடப்பட்டிருந்தது, ரத்த மாதிரி, இரத்த வகை மற்றும்

பிரிவுக்காக அனுப்பப்பட்டது, இறுதி அறிக்கையில் மேற்கண்ட நபர் காயங்களின் விளைவினால் ஏற்பட்ட ரத்தப்போக்கின் காரணமாக இறந்திருக்கக்கூடும் என்றும், மேலும் இறக்கும் தறுவாயில் அதிக அளவிலான மது அருந்தி இருந்தார் என்றும், இறுதி கருத்துறை வழங்கியதாகவும், தான் வழங்கிய சடலக்கூறாய்வு சான்று அ.த.சா.ஆ.4, இறுதி கருத்துரை அ.த.சா.ஆ.5, தன்னிடம் காண்பிக்கப்படும் இரண்டு அரிவாள்களால் புற ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ள காயம் எண்.2 ஏற்பட்டிருக்கக் கூடும், தன்னிடம் காண்பிக்கப்படும் இரண்டு இரும்பு பைப் காயம் எண்.1 மற்றும் 3 ஏற்பட்டிருக்கக் கூடும் என்றும், ஆய்வாளர் தன்னை விசாரணை செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

(ix) அ.சா.9 விஜயலட்சுமி, (அறிவியல் அலுவலர், தடய அறிவியல் துறை சென்னை), தனது சாட்சியத்தில், கடந்த 06.06.2019 அன்று உயிரியல் பிரிவு வேலூர் தடய அறிவியல் துறை ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட சத்துவாச்சாரி காவல் நிலைய குற்ற எண்.191/2019 வழக்குச்சொத்தில் இரத்தம் கண்டறியப்பட்ட பகுதி ஆய்வுக்காக பெறப்பட்டது என்றும், மேற்படி பொருட்களில் உள்ள இரத்தம் மனித ரத்தம் என கண்டறியப்பட்டது, மேலும் இனம் 3, 4, 5, 6, 7 மற்றும் 8 மற்றும் 10, 11 உள்ள பொருட்களில் இரத்தம் O பிரிவு வகையை சார்ந்தது என கண்டறியப்பட்டது, ஆனால் இனம் 1, 9, 12 ல் உள்ள இரத்தம் எந்த பிரிவு சார்ந்தது என கண்டறிய இயலவில்லை, இந்த ஆய்விற்கு SER/VLR/74/2019 தேதி 15.10.2019 அறிக்கை வேலூர் நீதித்துறை நடுவர் எண்.5 நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது, கடந்த 06.06.2019 அன்று உயிரியல் பிரிவு வட்டார தடய ஆய்வகம் வேலூரிலிருந்து பிரேத

பரிசோதனை எண்.420/2019 தேதி 21.04.2019 செல்வராஜ் என்பவரின் மாதிரி இரத்தம் ஆய்விற்காகப் பெறப்பட்டது, அதை ஆய்வு செய்ததில் அது O பிரிவை சார்ந்தது என கண்டறியப்பட்டது, இந்த ஆய்வறிக்கை SER/VLR/67/2019 தேதி 15.10.2019 என்று குறிப்பிடப்பட்டு வேலூர் அரசு மருத்துவக்கல்லூரிக்கு மற்றும் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது, ஆய்வாளர் தன்னை விசாரணை செய்ததாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.9 ன் சாட்சியத்திலிருந்து குருதி வடிநீர் ஆய்வு அறிக்கை அ.த.சா.ஆ.6, மாதிரி இரத்த வகை (Control Blood) அறிக்கை அ.த.சா.ஆ.7, ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(x) அ.சா.10 சதீஷ் தனது சாட்சியத்தில், எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், பிரபு யுவராஜ் ஆகியோர்களை தனக்கு தெரியாது என்றும், தான் காவல்துறை நண்பனாக 2016 ல் பணிபுரிந்ததாகவும், போலிசார் கையெழுத்து கேட்டதால் தான் செய்துகொடுத்தேன், வேறெதுவும் தனக்கு தெரியாது என்று பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

(xi) அ.சா.11 அண்ணாதுரை (காவல் ஆய்வாளர், மாவட்ட குற்றப்பிரிவு, செங்கல்பட்டு), தனது சாட்சியத்தில், 20.04.2019 தேதி இரவு 11.30 மணியளவில் உதவி ஆய்வாளர் இராமச்சந்திரன் நிலைய அலுவலில் இருந்தபோது, கோவிந்தன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.191/2019 இ.த.ச. பிரிவு 302 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், இவ்வழக்கின் புகார்தாரர் கோவிந்தன் வழக்கு விசாரணையின்போது இறந்துவிட்டார் அவரது இறப்புச்சான்றிதழ்

தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி மேல் விசாரணைக்கு கோப்பிணை பெற்று 21.04.2019 தேதி விடியற்காலை 00.30 மணியளவில் சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் கணேசன் மற்றும் குமரன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்ததாகவும், பின்னர் 01.15 மணியளவில் சம்பவயிடத்தில் இரத்தம் தோய்ந்த சிமெண்ட் தரை மற்றும் இரத்தம் தோயாத சிமெண்ட் தரை வெட்டி எடுத்து அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றியதாகவும், மேலும் அங்கிருந்த இரத்த மாதிரியை பஞ்சினால் இரத்தத்தை சேகரித்து பின்னர் சாட்சிகள் 06.30 முதல் 07.30 வரை சாட்சிகள் கோவிந்தன், ஆண்டாள், ரமேஷ், லோகேஷ், பாஸ்கர், கணேசன், குமரன், சதீஷ் மற்றும் சாமுண்டீஸ்வரி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பின்னர் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்று பஞ்சாயத்தார் முன்னிலையில் விசாரித்து பிரேத விசாரணை செய்ததாகவும், அவர் பிரேத பரிசோதனை முடிந்து இறந்த நபரான செல்வராஜ் என்பவர் அணிந்திருந்த ஆடைகளான இரத்தக்கறை படிந்த Blue Colour Jeans Pant ஒன்று இரத்தக் கறை படிந்த Blue Colour அரக் கை சட்டை ஒன்றும். இரத்தம் தோய்ந்த கருப்பு கலர் ஜட்டி ஒன்றும் படிவம்–91 மூலம் கைப்பற்றியதாகவும், சம்பவயிடத்தை நேரில் பார்த்ததிலிருந்தும் சாட்சிகளை விசாரித்ததிலிருந்தும் எதிரிகள் யுவராஜ், பிரபு, கணேசன், கிரிதரன் ஆகியோர்கள் இறந்த நபரை தேசிய நெடுஞ்சாலையில் விரட்டி இரும்பு பைப்பால் தாக்கியும், கத்தியால் வெட்டியும் கொலை செய்தது தெரிய வந்ததாகவும், பின்னர் 24.04.2019 அன்று இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளை விசாரணை செய்ததில் தனக்கு கிடைத்த

ரகசிய தகவலின்பேரில் மேற்படி நான்கு எதிரிகளை சத்துவாச்சாரி கணபதி நகர் சுடுகாடு அருகில் கைது, எதிரி யுவராஜை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து,எதிரி யுவராஜிடமிருந்து இரத்தக்கரை படிந்த கத்தி ஒன்றையும் புதரிலிருந்து மறைத்து வைத்திருந்த சட்டையையும், இரத்தக்கரை படிந்த முக்கால் pant ஒன்றையும் கைப்பற்றியதாகவும், 2ம் எதிரி பிரபுவை விசாரித்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், கணபதி நகர் ஆற்றங்கரை அருகேயுள்ள முட்புதரிடமிருந்து அவர் எடுத்து ஆஜர் செய்த கத்தி ஒன்று, TVS Apache TN-23-AR-3952 ஐ சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றியதாகவும், அதே இடத்தில் கிரிதரனை விசாரிக்க அவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து சுடுகாடு ஆற்றங்கரை அருகேயுள்ள முட்புதரிடமிருந்து மேற்படி எதிரி எடுத்து ஆஜர் செய்த இரும்பு பைப் ஒன்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாகவும், அதே இடத்தில் மதியம் 02.30 மணிக்கு எதிரி கணேசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் முட்புதரிலிருந்து அவர் எடுத்து ஆஜர் செய்த இரும்புபைப் ஒன்றையும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாகவும், எதிரி பொன்முடியை 03.05.2019 வருடம் கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து, அவரிடமிருந்து Mahindra இருசக்கசர வாகனம் TN-23-AH-7116 மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், தனது விசாரணையில் பாஸ்கர், விஜயகுமார் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லியுள்ளார், தனது விசாரணையில் கணேசன், குமரன் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லியுள்ளார்கள் என்றும், தனது விசாரணையில் சாட்சி சதீஷ்

எதிரிகள் குற்றச்செயல் பற்றி சொன்னதை பற்றி கூறியுள்ளார் என்றும், தான் பணி மாறுதலாகி சென்றுவிட்டதால் தனக்கு பின்பு பணியில் வந்து சேர்ந்த அழகுராணி மேல் விசாரணை செய்தார் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.11ன் சாட்சியத்திலிருந்து, கோவிந்தன் கொடுத்த எழுத்து மூலமான புகார் அ.த.சா.ஆ.8, அந்த அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.9, மாதிரி வரைப்படம் அ.த.சா.ஆ.10, கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.11, பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.12, படிவம்-91 அ.த.சா.ஆ.13 மற்றும் 14, எதிரி யுவராஜின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.15, கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.16, 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.17, கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.18, எதிரி கிரிதரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.19, கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.20 என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.21, கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.22 என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.23, கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.24, TVS Apache வண்டியின் புகைப்படம் அ.த.சா.ஆ.25, Mahindra Pink TN-23-AH-7116 புகைப்படம் அ.த.சா.ஆ.26 ஆகவும், இரத்தம் தோய்ந்த உடைந்த சிமெண்ட் தரை சா.பொ.1, இரத்தம் தோயாத உடைந்த சிமெண்ட தரை சா.பொ.2, சம்பவயிடத்தில் படிந்திருந்த இரத்தத்தை பருத்தி பஞ்சில் துடைத்த மாதிரி சா.பொ.3, இரத்தக் கரை படிந்த Blue Jeans Pant சா.பொ.4, இரத்தக் கரை படிந்த Light Blue Colour அரைக்கை சட்டை சா.பொ.5, இரத்தக் கரை படிந்த கருப்பு கலர் ஜட்டி சா.பொ.6, சுமார் 48 செ.மீ. இரும்பு பகுதி 10 செ.மீ. மரக்

கைப்பிடி கொண்ட கத்தி சா.பொ.7, இரத்தக் கரை படிந்த கருநீள மஞ்சள் வெள்ளை பூ போட்ட அரைக்கை சட்டை சா.பொ.8, கருப்பு மஞ்சள் வெள்ளை கட்டம் போட்ட முக்கால் Pant சா.பொ.9, கத்தியின் நீளம் சுமார் 50 செ.மீ. சா.பொ.10, சுமார் 50 செ.மீ. நீளம் மற்றும் 2 செ.மீ. விட்டம் கொண்ட இரும்பு பைப் சா.பொ.11, சுமார் 75 செ.மீ. நீளம் 2 1/2 செ.மீ. விட்டம் கொண்ட இரும்பு பைப் சா.பொ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(xii) அ.சா.12 சாமுண்டீஸ்வரி தனது சாட்சியத்தில், தனக்கும் இவ்வழக்கில் இறந்த செல்வராஜ்க்கும் 2010 ல் திருமணமானதாகவும், இறந்த கோவிந்தன் தனது மாமனார், ஆண்டாள் தனது மாமியார், ரமேண் தனது கொழுந்தனார் என்றும், 2012 ல் தனது கணவர் செல்வராஜை விட்டு பிரிந்து தனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டு, 2012 லிருந்து தான் தனியாகத்தான் வாழ்ந்து வருவதாகவும், 2019 ல் தனது கணவர் இறந்தது சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரிததாகவும், தான் தனியாக வாழ்ந்து வருகிறேன் என்றும் தனது கணவரை பற்றி தனக்கு தெரியாது என்று சொல்லிவிட்டதாகவும், போலிசார் தன்னை விசாரணை செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

(xiii) அ.சா.13 சதாசிவம் தனது சாட்சியத்தில், எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், பிச்சாண்டியை தெரியும் அவர் இறந்துவிட்டார் என்றும், செல்வராஜ் இறந்தது பற்றி தனக்கு தெரியாது, 5 ம் எதிரியை தனக்கு தெரியாது, வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

(xiii) அ.சா.14 அழகுராணி தனது சாட்சியத்தில், தான் சத்துவாச்சாரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது குற்ற எண்.191/2019 வழக்கில் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 24.08.2019 ம் தேதி பகல் 01.00 மணிக்கு அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த எதிரி வீச்சு (எ) தினேஷை சாட்சிகள் முன்னிலையில் கைது செய்து விசாரித்து அவர் அளித்த ஒப்புதல்வாக்குமூலத்தை பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், இவ்வழக்கில் சடலக்கூராய்வு செய்த மருத்துவரை விசாரித்து சடலக்கூராய்வு அறிக்கை பெற்று வட்டார தடய அறிவியல் அலுவலரை விசாரணை செய்து தடய அறிவியல் அறிக்கை பெற்றதாகவும், புலன்விசாரணை அடிப்படையில் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.14 ன் சாட்சியத்திலிருந்து எதிரி வீச்சு (எ) தினேஷ் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.27, சட்டப்பிரிவு மாறுதல்அறிக்கை அ.த.சா.ஆ.28 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் படி கேள்விகள் கேட்க எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்; ***1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 302 r/w 120(B), 148, 302, 506(2)ன் கீழும், 5 மற்றும் 6 வரையிலான***

***எதிரிகள் மீது இதச பிரிவுகள் 302 r/w 120(B), 148, 302 ன் கீழும் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?***

8. <u>பிரச்சனை:</u>

(i) இவ்வழக்கின் பட்டியல் சாட்சி–1 மற்றும் புகார்தாரரான கோவிந்தன் வழக்கு விசாரணையின்போது, இறந்துவிட்டார் என இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டது. கோவிந்தன் இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன செல்வராஜ் என்பவரின் தந்தை. அ.சா.1 ஆண்டாள் இவ்வழக்கில் கொலை செய்யப்பட்ட செல்வராஜின் தாயார். அ.சா.2 ரமேஷ் அ.சா.1 ன் மகன் மற்றும் செல்வராஜின் சகோதரர்.

(ii) அ.சா.1 தனது சாட்சியத்தில், அவரது கணவர் கோவிந்தன் இரண்டு வருடங்களுக்கு முன்பு உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார் என்றும், 20.04.2019 அன்று எதிரி கணேஷ் அவரது மகன் செல்வராஜை வீட்டிலிருந்து கூப்பிட்டார் மாலை ஒரு மணி நேரம் கழித்து அவரது மகனை வெட்டிவிட்டதாக இளைய மகன் ரமேஷ் பார்த்து வந்து சொன்னார். உடனே அவர் அவரது மகனான அ.சா.2, அவரது கணவர் பால்பண்ணை கேட்டிற்கு வந்து வெட்டப்பட்டு இரத்த வெள்ளத்திலிருந்த அவரது மகனை பார்த்து யார் இந்த மாதிரி செய்தது என்று கேட்டதற்கு எதிரி யுவராஜ் தன்னை வெட்டியதாக சொன்னார் என்று சாட்சியமளித்துள்ளார்.

(iii) மேலும் அ.சா.2 ரமேஷ் தனது சாட்சியத்தில், 20.04.2019 மாலை 8.15 மணிக்கு கூட்டமாக இருந்தது போய் பார்த்தபோது அவரது

அண்ணன் செல்வராஜ் வெட்டுக்காயம்பட்டு ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக்கொண்டிருந்தார் என்றும். உடனே அவரது அம்மா அப்பாவிற்கு போன் மூலம் தகவல் சொல்லி அவர்கள் வந்து விசாரித்தபோது செல்வராஜ் அவரை யுவராஜ் கத்தியால் வெட்டிவிட்டதாக சொன்னார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(iv) மேலும் அ.சா.2 ரமேஷ் சம்பவத்திற்கு 2 நாட்களுக்கு முன்பாக பிரபு, யுவராஜ், கணேசன் வீட்டிற்கு வந்து அ.சா.2 இடம் அவருடைய அண்ணன் செல்வராஜை ஒழுங்காக இருக்கச்சொல் இல்லையென்றால் அவனது சாவு எங்கள் கையில் தான் என்று சம்பவத்திற்கு 10 நாட்கள் முன்பாக பால்பண்ணைக்கு எதிரே யுவராஜ் மேலும் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 4 எதிரிகளும் செல்வராஜை போட்டுத்தள்ள வேண்டும் என பேசியதை கேட்டதாக சாட்சியமளித்துள்ளார்.

(v) இவ்வழக்கில் கோவிந்தன் என்பவரது புகார் அ.த.சா.ஆ.8 ல் " 20.04.2019 இரவு 08.15 மணிக்கு அவரது இளைய மகன் ரமேஷ் ஓடி வந்து செல்வராஜ் ஆவின் பால்பண்ணை கேட் அருகே வெட்டப்பட்டுக்கிடப்பதாக சொல்ல கோவிந்தன், அவரது மனைவி அ.சா.1 ஆண்டாள் பால்பண்ணை முன்கேட் உள் சென்று பார்த்தபோது செல்வராஜ் வெட்டுக்காயங்களுடன் ரத்த வெள்ளத்தில் கிடந்தான் என்றும் 108 ஆம்புலன்ஸ் மூலம் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் சேர்த்துவிட்டு காவல் நிலையம் வந்து அவரது மகனை வெட்டிக்கொலை செய்தவர்கள் மீத நடவடிக்கை எடுக்குமாறு " என புகாரில் கண்டுள்ளது.

(vi) அ.சா.9 முதல் தகவல் அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்டவரின் விவரம் என்ற காலம் 7 ல் Not known என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அ.த.சா.ஆ.12 பிரேத விசாரணை அறிக்கையில்,

**காலம் 3 ல் இறந்து கிடந்ததை முதலில் கண்டது யார்? எங்கே?**

இரத்த காயங்களுடன் உயிருக்கு போராடிய செல்வராஜ் என்பவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் GVMCH க்கு எடுத்து வந்து அவரை பரிசோதித்த டாக்டர் சதீஷ் இறந்தது பற்றி கண்டறிந்து உறுதி செய்துள்ளார்.

**காலம் 11(அ) எந்த நபர் மீது சந்தேகம், இருந்தால் யார் மீது? என்ன காரணத்திற்காக ? எப்படி?**

முன்விரோதம்

மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.12 காவல் ஆய்வாளரால் 21.04.2019 வேலூர் அடுக்கம்பாறை GVMCH சவக்கிடங்கில் பிரேத விசாரணை மேற்கொண்டு முடிக்கப்பட்டுள்ளது.

(vii) அ.சா.1 ஆண்டாள் கொலை செய்யப்பட்ட செல்வராஜின் தாயார் தனது குறுக்கு விசாரணையில். 20.01.2019 அன்று எதிரி கனேசன் அவரது மகனை வீட்டிலிருந்து மாலை 05.30 மணிக்கு கூட்டிச்சென்றதாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் இல்லையென சாட்சிமளித்துள்ளார். மேலும் அ.சா.2 ரமேஷ் ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த அவரது அண்ணனை விசாரித்தபோது யுவராஜ் தன்னை கத்தியால் வெட்டினார் என கூறியுள்ளபோதும் அதுகுறித்து அவரது அப்பாவோ அல்லது அ.சா.1, அ.சா.2 டோ போலிசாரிடம் புகாரளிக்கும்போது எதிரி யுவராஜ்

செல்வராஜை வெட்டிக்கொலை செய்ததாக புகாரளிக்கவில்லை. மேலும், பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.12 லும் கொலை செய்யப்பட்ட செல்வராஜ் எதிரி யுவராஜ் கத்தியால் வெட்டினார் என்று செல்வராஜே கோவிந்தனிடம் சொன்னதாக பஞ்சாயத்தார்கள் குறிப்பிட்டதாகவோ, அ.சா.1 மற்றும் 2 புகார்தாரரான கோவிந்தன் எதிரி யுவராஜ் வெட்டியதாக செல்லவராஜ் சொன்னதாக அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

(viii) மேலம் அ.சா.11 காவல் ஆய்வாளரது சாட்சியத்தில், பிரேத விசாரணை அறிக்கையில் எதிரிகள் பெயர் குறித்து சாட்சிகளோ, பஞ்சாயத்தாரோ எதுவும் சொல்லவில்லை. கோவிந்தன் கொடுத்த எழுத்து மூலமான புகாரில் எதிரிகள் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி என சாட்சியமளித்துள்ளதும் மேலும் அ.சா.11 காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் இறந்தவரை மருத்துவமனையில் 108 ஆம்புலன்சில் டிரைவர் சிகிச்சைக்கு சேர்த்தார் என்றால் சரி. புகார்தாரர் அவரது மகனை மருத்துவமனையில் சேர்த்தேன் என குறிப்பிட்டது குறித்து நான் விசாரணை செய்தேனா என்றால் நான் விசாரணை செய்யவில்லை.

(ix) மேலும் இவ்வழக்கில் 108 ஆம்புலன்ஸ் டிரைவரை தான் விசாரிக்கவில்லையென்றும், முதல் தகவல் அறிக்கையில் உதவி ஆய்வாளர் அடையாளம் தெரியாத எதிரிகள் என்று தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரி. புகாரில் இறந்த அவரது மகன் செல்வராஜ், கோவிந்தன் சம்பவயிடம் சென்று பார்த்தபோது உயிருடன் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரி என சாட்சியமளித்துள்ளார்.

(x) அ.சா.1 ஆண்டாள் அவரது மகன் அ.சா.2 ரமேஷ் ஆகியோர் தங்களது சாட்சியத்தில் உயிருக்கு போராடிக்கிடந்த செல்வராஜை எல்லோரும் விசாரித்தபோது எதிரி யுவராஜ் கத்தியால் வெட்டியதாக சொல்லியிருப்பின், புகாரில் அ.சா.1 ஆண்டாளின் கணவர் கோவிந்தன் எதிரி யுவராஜ் அவரது மகனான செல்வராஜை கத்தியால் வெட்டி கொலை செய்தார் என நிச்சயம் குறிப்பிட்டிருப்பார். மேலும், இவ்வழக்கில் 108 ஆம்புலன் டிரைவரை அரசுத்தரப்பு சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. வழக்கு கோப்பில் கொலை செய்யப்பட்ட செல்வராஜை வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் சேர்த்ததற்கான விபத்து பதிவேடு உள்ள நிலையில், அத்தகைய விபத்துப்பதிவேடு பதிவு செய்த அரசு மருத்துவர் சாட்சியாக அரசுத்தரப்பில் விசாரிக்கப்படவில்லை. மேலும் விபத்து பதிவேடும் சான்றாவணமாக அரசுத்தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை.

(xi) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில்,கொலை செய்யப்பட்ட செல்வராஜினுடைய விபத்து பதிவேட்டு அறிக்கை அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டபோதிலும், அரசுத்தரப்பு அதனை சான்றாவணமாக குறியீடு செய்யப்படவில்லை. விபத்து பதிவேடு அறிக்கையை பரிசீலிக்கையில் **கொண்டு வந்தவர் என்ற காலத்தில் 108** என்றும், வண்டி எண் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், Nature of Injury and Treatment என்ற காலத்தில் patient was brought with alleged assault. (Details not known) on 20.04.2019 8.15 p.m, near Sathuvachari Aavin. மேற்படி விபத்து பதிவேடு அறிக்கை சான்றாவணமாக அரசுத்தரப்பில் குறியீடு செய்யப்படாததால் நீதிமன்றம் அதை சாட்சியத்தில் எடுத்துக்கொள்ள இயலவில்லை.

(xii) இறந்த செல்வராஜின் தந்தை புகார்தாரர் கோவிந்தன், தாயார் அ.சா.1 ஆண்டாள், சகோதரர் அ.சா.2 மேற்படி அவர் ரத்தக்காயங்களுடன் உயிருக்கு போராடிக்கொண்டிருந்தபோது, யார் காரணம் என விசாரித்ததாக சாட்சியமளித்த நிலையில் மேற்படி செல்வராஜூடன் அவரது உயிரைக்காப்பாற்ற 108 ஆம்புலன்சில் அவருடன் சென்று அரசு மருத்துவரிடமும் மேற்படி காயங்கள் அவருக்கு எப்படி ஏற்பட்டது என்பதனை சொல்லத்தவறியுள்ளதும், எதிரிகளை பற்றி கொலைக்கு முக்கியமான எதிரி யுவராஜை பற்றி புகாரில் முதன்முதலில் குறிப்பிடாததும், தனது மகனை கொலை செய்ததாக தனது மகன் உயிருடன் உள்ளபோது அவரது அப்பாவான கோவிந்தனிடம் சொல்லிய நிலையில், மேற்படி எதிரி யுவராஜின் பெயரை புகாரிலும், மறுநாள் நடந்த பிரேத விசாரணை அறிக்கையிலும் மேற்படி புகார்தாரரான கோவிந்தனோ அவரது தாயாரான அ.சா.1 மற்றும் சகோதரரான அ.சா.2 கூறாதது மேற்படி சாட்சிகளுக்கு செல்வராஜ் வெட்டுக்காயம்பட்டு சம்பவயிடத்தில் அவர் உயிருக்கு போராடிக்கொண்டிருந்ததை பார்த்ததாகவும், எதிரி யுவராஜை பற்றி கூறிய சங்கதிகள் பற்றி அரசுத்தரப்பு அ.சா.1, அ.சா.2 ன் சாட்சியம் நீதிமன்றம் நம்பும் வகையிலும் ஏற்கும் வகையிலும் அமையவில்லை. அ.சா.1, அ.சா.2 புகார்தாரரான கோவிந்தன், செல்வராஜை சம்பவயிடத்தில் பார்த்து விசாரித்தோம் சாட்சியத்தில் நம்பும்படியாக அமையவில்லை.

(xiii) அ.சா.1 ஆண்டாள் தனது மகனான அ.சா.2 வீட்டிற்கு வந்து செல்வராஜ் வெட்டி ரத்தக்காயங்களுடன் உள்ளார் என தகவல் சொன்னதன் அடிப்படையில் மூன்று பேரும் சம்பவயிடம் சென்று பார்த்தோம் என சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 ரமேஷ் தனது

சகோதரரான செல்வராஜ் சம்பவயிடத்தில் ரத்தக்காயங்களுடன் உயிருக்கு போராடிக்கொண்டிருந்தபோது அவரது உயிரை காப்பாற்ற மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முயற்சிக்காமல் உடனே தனது வீட்டிற்கு வந்து பெற்றோர்களிடம் செல்வராஜ் ரத்தக்காயங்களுடன் வெட்டுப்பட்டுக்கிடந்தார் என சொன்னார் என்பதே வழக்கிற்காக செல்வராஜ் ரத்த வெள்ளத்துடன் இருந்தபோது யுவராஜ் கத்தியால் வெட்டினார் என சொன்னார் என்பதற்காக பின்யோசனையிடப்பட்டு வழக்கை மேம்படுத்துவதற்காக அமைந்து காணப்படுகிறது. மேலும் அத்தகைய உறுதியூட்டப்படாத மரண வாக்குமூலம் (Uncorroborated dying declaration) அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்படும் செல்வராஜ் ரத்தக்காயங்களுடன் எதிரி யுவராஜ் பற்றி மட்டும் சொன்னார் என்பது வழக்கிற்காகவே அ.சா.1 மற்றும் அ.சா.2 வழக்கை மேம்படுத்துவதற்காக சொல்வது ஏற்கும்படியாக அமையவில்லை என தீர்மானம் செய்கிறேன்.

(xiv) அரசுத்தரப்பு சாட்சி அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியத்தின்படி ரத்தக்காயம்பட்டு உயிருக்கு போராடிய நிலையில் உள்ள செல்வராஜை பார்த்து அ.சா.2 வீட்டிற்கு வந்து அ.சா.1 இடமும் மற்றும் புகார்தாரர் கோவிந்தனிடமும் சொல்லி மூவரும் சம்பவயிடம் சென்று செல்வராஜை பார்த்து யார் காரணம் என கேட்ட நிலையில், மருத்துவமனைக்கு செல்வராஜின் தாயார் குறைந்தபட்சம் 108 ஆம்புலன்சில் சென்று சிகிச்சைக்கு சேர்த்ததாக எவ்வித சாட்சியமும் அமையாத நிலையில் செல்வராஜ் ரத்தக்காயங்களுடன் வெட்டுப்பட்டுக்கிடந்த சம்பவயிடத்திற்கு மூவரும் சென்றார்கள் என்பதே பெருத்த சந்தேகத்திற்குரியதாகிறது.

(xv) மேலும் அ.சா.2 ரமேஷ் தனது அண்ணனை எதிரிகள் போட்டுத்தள்ள வேண்டும் என பேசியதை போலிசார் விசாரணையில் சொல்லவில்லையென்றும், அது குறித்து சதிதிட்டம் குறித்து போலிசாரிடம் புகார் எதுவும் அளிக்கவில்லையென குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளதும், அ.சா.11 காவல் ஆய்வாளர் இந்த சம்பவத்திற்கு முன்பாக இறந்த நபரின் பெற்றோர், சகோதரர் எதிரிகள் மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரி என சாட்சியமளித்துள்ளதும். அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளது மேற்படி காவல் ஆய்வாளர் அ.சா.11 ன் சாட்சியத்தில் எதிரிகள் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது எனவே, அத்தகைய முரண்பாடு அரசுத்தரப்பு வழக்கை சந்தேகத்திற்குள்ளாக்குகிறது எனவும் தீர்மானம் செய்கிறேன்.

(xvi) மேலும், அரசுத்தரப்பில் செல்வராஜை மருத்துவமனையில் சேர்த்த மருத்துவரை விசாரித்து விபத்து பதிவேடு அறிக்கையை சாட்சியமாகவோ சான்றாவணமாகவோ முன்னிலைப்படுத்தப்பட வில்லை. மேற்படி செல்வராஜை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்த மருத்துவரை நீதிமன்றத்தில் விசாரித்திருப்பின் அவர் சுயநினைவுடன் இருந்தாரா, மேற்கண்ட காயங்களினால் பேசும் திறனில் இருந்தாரா என்பது குறித்தும் நீதிமன்றம் சாட்சியத்தை பரிசீலனை செய்திருக்கக்கூடும். மேலும் அவர் சுயநினைவோடு இருப்பின் தனக்கு ஏற்பட்ட காயங்கள் யாரால், எப்போது, எப்படி ஏற்பட்டது என்று நிச்சயமாக மருத்துவர் விசாரணை செய்யும்பொழுது கூறியிருப்பார். அரசுத்தரப்பில் அத்தகைய முக்கியமான சாட்சியத்தை விசாரிக்காமல்

சாட்சியப்பட்டியலிலும் விபத்து பதிவேடு மருத்துவரை சாட்சியாக குறிப்பிடாததும், அரசுத்தரப்பு வழக்கு பின்னிட்டு எதிரிகள் மீது மேம்படுத்துவதற்காக புகார்தாரர் கோவிந்தன், அ.சா.1 மற்றும் அ.சா.2 இடம் செல்வராஜ் எதிரி யுவராஜ் பற்றி சொன்னார் என பின்யோசனையிடப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டதற்காக தான் விபத்துப்பதிவேடு அறிக்கையையும், விபத்து பதிவேடு மருத்துவரையும் சாட்சிப்பட்டியலில் குறிப்பிடாதது அரசுத்தரப்பு வழக்கை பாதிப்படைய செய்கிறது. மேலும், அரசுத்தரப்பிற்கு எதிராக இந்திய சாட்சியியல் சட்டம் பிரிவு 114(g)ன் படி எதிரிடை அனுமானம் (Adverse inference) மேற்படி முக்கியமான சாட்சியத்தை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த தவறியுள்ளதால் நீதிமன்றம் எதிரிகளுக்கு ஆதரவாக எடுத்துக்கொள்கிறது. மேற்படி விபத்துப்பதிவேட்டு மருத்துவரை விசாரித்திருப்பின் அது அரசுத்தரப்பிற்கு எதிராக, பாதித்துவிடும் என்பதற்காக அரசுத்தரப்பு மேற்படி விபத்து பதிவேடு மருத்துவரை, விபத்து பதிவேடு அறிக்கையை சாட்சிய சான்றாவனமாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

(xvii) அ.சா.8 சடலக்கூராய்வு மருத்துவர் திருமதி.கலைச்செல்வி தனது சாட்சியத்தில், சடலக்கூராய்வு செய்யும்பொழுது பிரேதத்திற்கு வெட்டுக்காயங்கள் எலும்பு வரை ஆழத்திலும் தலையின் மேற்பகுதியிலும் முகத்தின் இடதுபுறத்திலும் அது இடதுபுற கண்கள், மூக்கு மற்றும் இடது கன்னம், இடது காதுவரை நீண்டிருந்தது, எலும்புவரை ஆழத்தில் தாடையின் இடதுபுறத்தில் வெட்டு முறிவு, எலும்பு முறிவுகள் என வெளிப்புறக்காயங்கள் காணப்பட்டது,

கபாலத்தின் இடது புறத்தில் வெட்டு முறிவு இருந்தது என்றும், மேற்படி நபர் அதிக ரத்தப்போக்கின் காரணமாக இறந்திருந்தார் என சாட்சியமளித்த நிலையில், மேற்கண்ட கொடூர காயங்களின் விளைவாக ஒரு நபர் அதீத ரத்தப்போக்கின் காரணமாக இறப்பு ஏற்பட்டுள்ள நபர் சம்பவயிடத்தில் சுயநினைவுடன் பேசும் திறனுடன் இருந்திருப்பாரா என்பதே சடலக்கூராய்வு மருத்துவரின் சான்றின் அடிப்படையில் சந்தேகத்திற்குரியதாகிறது. எனவே, சம்பவயிடத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ரத்தக்காயங்களுடன் இருந்த செல்வராஜை பார்த்து விசாரித்தனர் என்பதே நம்பும்படியாக அமையவில்லை என்றும் வழக்கிற்காக பின்யோசனையிடப்பட்டு வழக்கை எதிரிகள் மீது மேம்படுத்துவதற்காக அரசுத்தரப்பில் முன்னிலையிடப்பட்டுள்ளது என்பதும் அதுவும் அரசுத்தரப்பில் எதிரிகளுக்கு எதிராக பயனளிக்கவில்லை என தீர்மானம் செய்கிறேன்.

(xviii) இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சி அ.சா.7 துணை இயக்குநர் வட்டார தடய அறிவியல் அலுவலர் தனது சாட்சியத்தில், இறந்துபோன நபர் உடலில் அளவிற்கு அதிகமான எத்தில் ஆல்கஹால் இருந்துள்ளது என சாட்சியமளித்துள்ளார்.

(xix) அ.சா.9 தடய அறிவியல் துறை அலுவலர் அவரது குருதி வடிநீர் ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.6 இனம் 3, 4, 5, 6, 7, 8, 10, 11 பொருட்களில் உள்ள ரத்தம் 'O' பிரிவை சேர்ந;து என்றும், இனம் 1, 9, 12 எந்த ரத்தப்பிரிவு என கண்டறியவில்லை எனவும் இறந்த செல்வராஜ் மாதிரி ரத்த வகை அ.த.சா.ஆ.7 எனவும் சாட்சியம் அளித்துள்ளார். தடய

அறிவியல் துறை அறிக்கையின்படி எதிரிகளுடைய ரத்த வகை மேற்படி வழக்கு சொத்தான கத்தி, அரிவாள், இரும்பு பைப்பில் கண்டறியப்பட்டுள்ளது என்றோ எவ்வித சாட்சியமும் அமையவில்லை.

(xx) அ.சா.8 சடலக்கூராய்வு மருத்துவரும் தனது சாட்சியத்தில் ஆய்வாளர் அவரை விசாரிக்கும்போது வழக்கு சொத்தான இரும்பு பைப் அரிவாள் போன்றவற்றால் தான் மேற்சொன்ன காயங்கள் எற்படுமா என்றும் விசாரிக்கவில்லை என்பதும், அரசுத்தரப்பு வழக்கினை பாதிப்படைய செய்கிறது.

(xxi) இவ்வழக்கில் அ.சா.3 பாஸ்கர், கொலை செய்யப்பட்ட செல்வராஜின் நண்பர் அரசுத்தரப்பில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக முன்நிறுத்தியபோதிலும் அவர் இறந்த செல்வராஜை தெரியாது, எதிரிகளை தெரியாது யுவராஜ் என்பவரை தெரியாது செல்வராஜை யார் தாக்கினார்கள் என்று தெரியாது வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என சாட்சியமளித்து பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார். அரசுத்தரப்பிற்கு நேரில் பார்த்ததாக சாட்சியமளித்துள்ள அ.சா.3 ன் சாட்சியம் பயனளிப்பதாக அமையவில்லை.

(xxii) அ.சா.4 குமரன் கொலையுண்டு இறந்துபோன செல்வராஜினுடைய மச்சான், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அவரது சாட்சியமும் அரசுத்தரப்பிற்கு பயனளிப்பதாக அமையவில்லை.

(xxiii) மேலும், அ.சா.5 கணேசன் வேலூர் ஆவின் பால்பண்ணையின் பாதுகாவலராக 20.04.2019 ம் தேதி சுமார் இரவு 10.00 மணிக்கு பணியிலிருந்தபோது, மெயின் கேட் ஓரத்தில் ஒரு நபர் விழுந்து கிடந்தவரை ஒரு நபர் கட்டையால் அடித்துக்கொண்டிருந்தார் அந்த நபர் முகமூடி அணிந்திருந்தார் என சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.5 கணேசன் எதிரிகளை அடையாளப்படுத்தியோ, எந்த எதிரி கட்டையால் தாக்கினார் என்றோ சாட்சியமளிக்காததால் அரசுத்தரப்பில் மேற்படி அ.சா.5 யை பகுதி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அவரது சாட்சியம் பார்வை மகசர் அ.த.சா.ஆ.1 சம்பவயிடத்திலிருந்து கைப்பற்றிய ரத்தம் தோய்ந்த மண் அதற்கு மட்டும் ஏற்றுக்கொள்ள இயலுமே ஒழிய எதிரிகளுக்கு எதிரான சாட்சியமாக அமைந்து காணப்படவில்லை. மேலும், அ.சா.5 ன் சாட்சியம் அரசுத்தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு அமைந்துள்ளது.

(xxiv) அ.சா.6 விஜயகுமார் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதும், அவர் எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், வழக்கில் ஒரு நபர் வெட்டிக்கொலை செய்யப்பட்டு இறந்தார் என்று தெரியும், அவர் எப்படி இறந்தார் என்று தெரியாது, இந்த வழக்கு குறித்து எதுவும் தெரியாது என்று பிறழ்சாட்சியமளித்துள்ளார் எனவே அவரது சாட்சியமும் அரசுத்தரப்பிற்கு பயனளிப்பதாக அமையவில்லை.

(xxv) மேலும் சம்பவத்தை கண்ணுற்றதாக முன்னிலைப்படுத்தபட்ட பட்டியல் சாட்சி-4 லோகேஷ் எங்கு வசிக்கிறார் என அறிய

இயலவில்லையெனவும் கிராம நிர்வாக அலுவலர் சான்று தாக்கல் செய்யப்பட்டு அரசுத்தபரப்பில் அவரது சாட்சியம் தளர்நீடு செய்யப்பட்டது. மேலும், கண்ணுற்ற சாட்சியான பட்டியல் சாட்சி–12 இறந்துவிட்டார் என இறப்பு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

(xxvi) இவ்வழக்கில் எதிரிகள் மேற்படி கொலையுண்ட செல்வராஜை கொலை செய்ய சதி திட்டம் தீட்டியதற்கான சாட்சிகளாக பட்டியல் சாட்சி–13 பிச்சாண்டி இறந்துவிட்டார் என அரசுத்தரப்பில் இறப்பு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மேலும் சதிதிட்டம் குறித்து அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.13 சதாசிவம் தனக்கு எதிரிகளை தெரியாது, செல்வராஜ் இறந்தது பற்றி எதுவும் தெரியாது, வழக்கு சம்பந்தமாக ஒன்றும் தெரியாது என சாட்சியமளித்ததால் அவர் அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அவரது சாட்சியமும் அரசுத்தரப்பிற்கு சதித்திட்டம் குறித்து எதிரிகளுக்கு எதிரான சாட்சியமாக பயனளிப்பதாக அமையவில்லை.

(xxvii) இவ்வழக்கில் அ.சா.8 மருத்துவர் மற்றும் சட்டம் சார்ந்த மூத்த உதவி பேராசிரியர் இறந்த செல்வராஜ் என்பவரது பிரேதத்தை சடலக்கூராய்வு செய்து மேற்படி நபர் அவருக்கு உடலில் ஏற்பட்ட பலதரப்பட்ட காயங்களின் விளைவினால் ரத்தப்போக்கின் காரணமாக இறந்திருக்கக்கூடும் என்றும் மேலும் இறக்கும் தருவாயில் அதிக அளவிலான மது அருந்தியிருந்தார் என்றும் இறுதிக்கருத்துரை அ.த.சா.ஆ.5 மற்றும் சடலக்கூராய்வு அறிக்கை அ.த.சா.ஆ.6 வழக்கியதாக சாட்சியமளித்துள்ளார். அரசுத்தரப்பில் செல்வராஜிக்கு

ஏற்பட்ட இறப்பானது கொலை செய்யப்பட்டு இறந்துள்ளார் என நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

(xxviii) இவ்வழக்கின் எதிரிகள் யுவராஜ், பிரபு, கிரிதரன், கனேசன் ஆகியோரை 24.04.2019 அன்றும், எதிரி பொன்முடியை 03.05.2019 அன்றும், வீச்சு (எ) தினேஷை 24.08.2019 அன்றும் அ.சா.11 காவல் ஆய்வாளர் கைது செய்து, மேற்படி எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூல பட்டியல் சாட்சிகளான 20–கிராம நிர்வாக அலுவலர், 21–கிராம நிர்வாக உதவியாளர் இருவரும் இறந்துவிட்டதாக அரசுத்தரப்பில் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி அ.சா.11 காவல் ஆய்வாளர் எதிரிகளை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாகவும், 1ம் எதிரி யுவராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூல தகவலின் அடிப்படையில் கத்தியை கைப்பற்றியதாகவும், 2வது எதிரி பிரபுவிடமிருந்து கத்தியை கைப்பற்றியதாகவும், 3ம் எதிரி கிரிதரனிடமிருந்து இரும்பு பைப் கைப்பற்றியதாகவும், 4ம் எதிரி கணேசனிடமிருந்து இரும்பு பைப் கைப்பற்றியதாகவும், 5ம் எதிரி பொன்முடியிடமிருந்து மகேந்திரா இருசக்கர வாகனம் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாக சாட்சியமளித்துள்ளார்.

(xxix) அ.சா.11 காவல் ஆய்வாளரது சாட்சியத்தின் மூலம் எதிரிகள் 1, 2, 3, 4, 5 அவர்களுடைய ஒப்புதல் வாக்குமூல தகவலின் அடிப்படையில் வழக்கு சொத்தான கத்தி 2ம் கைப்பற்றப்பட்டதா என்பது அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யத்தவறியுள்ளது மேலும் அ.சா.11 காவல் ஆய்வாளர் 1, 2, 3, 4 எதிரிகளை ஆற்றங்கரை ஓரமுள்ள

முட்புதரிடம் கைது செய்து அந்த இடத்திலேயே வழக்கு சொத்துக்களை கைப்பற்றியதாக ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியில் (Admissible portion of confession) கண்டுள்ளது மற்றும் சாட்சியமும் அ.சா.11 ம் அவ்வாறே அளித்துள்ளார்.

(xxx) இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 27 ன் கீழ் ஒப்புதல் வாக்குமூல தகவலின் அடிப்படையில் எவ்வித பொருண்மையும் கண்டறியப்பட்டதாக அ.சா.11 காவல் ஆய்வாளரது சாட்சியம் அமையப்பெறவில்லை. மேலும், அ.சா.1 ஆண்டாள், அ.சா.2 ரமேஷ் கொலை செய்யப்பட்ட செல்வராஜின் தாயார் மற்றும் சகோதரனின் சாட்சியம் கொலையுண்டு இறந்த செல்வராஜ் எதிரி யுவராஜ் கத்தியால் வெட்டியதாக இறப்பிற்கு முன்னர் அ.சா.1 மற்றும் அ.சா.2 இடம் சொன்னார் என்பது அரசுத்தரப்பில் நீதிமன்றம் ஏற்கும் வகையிலும் நம்பும் வகையிலும் சாட்சியம் மற்றும் சங்கதிகளின் அடிப்படையில் நிரூபணம் செய்ய தவறியுள்ளது. எதிரிகள் கொலை செய்யப்பட்ட செல்வராஜை கொலை செய்ய சதி திட்டம் தீட்டினார்கள் என்பதற்கான சாட்சியம், மற்றும் கொலையை நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.3, அ.சா.6 ஆகியோர் பிறழ்சாட்சிகளாகிவிட்டபடியாலும், அ.சா.5 நேரில் பார்த்த சாட்சியம் முகமூடி அணிந்த ஒரு நபர் செல்வராஜை கட்டையால் அடித்துக்கொண்டிருந்தார் என்று மட்டும் சாட்சியமளித்துள்ளதும் அவரையும் அரசுத்தரப்பில் பகுதி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளதும் எதிரிகள் செல்வராஜை முன்விரோதம் காரணமாக கொலை செய்துள்ளார்கள் என்று எதிரிகளை குற்றத்தோடு தொடர்புபடுத்தக்கூடிய அளவில் அரசுத்தரப்பில் சாட்சியம் எதுவும் அமையப்பெறவில்லை

என்றும் அரசுத்தரப்பு எதிரிகளுக்கு எதிரான குற்றத்தினை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யத்தவறியுள்ளது என தீர்மானம் செய்கிறேன்.

(xxxi) இவ்வழக்கில் கொலை செய்யப்பட்ட செல்வராஜ் கொடூரமான வெட்டுக்காயங்களால் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று சடலக்கூராய்வு மருத்துவரது சாட்சியம் அமைந்துள்ளபோதிலும், எதிரிகள் மீதான அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சந்தேகம் பெருத்த அளவில் இருந்தபோதும், சட்டப்படி அது எதிரிகளுக்கு எதிரான குற்றத்தை நிரூபணம் செய்வதற்காக எவ்வித அனுமானமும் நீதிமன்றம் கருத முடியாது. அரசுத்தரப்பில் எதிரிகளுக்கு எதிராக **எவ்வித முன்விரோதம், எவ்வித கூட்டு சதி, நேரில் பார்த்த சாட்சிகள் பிறழ்சாட்சிகள், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் அரசு அலுவலர்கள் மற்றும் ஒப்புதல் வாக்குமூல பொருண்மையின் அடிப்படையில் எவ்வித தகவலும் கண்டறியப்படாததும், தடய அறிவியல் அறிக்கையின் படி எதிரிகளை தொடர்புபடுத்தப்படாததும்** அரசுத்தரப்பு வழக்கு எதிரிகளை குற்றத்தோடு தொடர்புபடுத்த தவறியுள்ளது என்ற நிலையில், முதல் தகவல் அறிக்கை, பிரேத விசாரணை அறிக்கையில் கூறப்படாமல், பின்னிட்டு வழக்கை மேம்படுத்துவதற்காக எதிரி யுவராஜ் மீது அ.சா.1 அ.சா.2 ன் சாட்சியமோ, நீதிமன்றம் ஏற்கும் வகையில் அமையால் சந்தேகத்திற்குரியதாக அமைந்துள்ளதாலும் அத்தகைய அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியம் அக்கறையுள்ள சாட்சி மேலும் செல்வராஜை உயிருடன் இருந்தபோது பேசியிருக்கவே முடியாது என்றும், சம்பவயிடத்தில் அ.சா.1, அ.சா.2 இருந்திருக்கவே இயலாது என்றும் அரசுத்தரப்பு வழக்கு எதிரிகள் மீதான

குற்றத்தினை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்ய தவறியுள்ளது என்றும் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்குவது நீதியின் பால் உகந்தது எனவும் தீர்மானம் செய்கிறேன்.

(xxxii) வழக்கை புலன்விசாரணை செய்த காவல் ஆய்வாளரான அ.சா.11 மற்றும் அ.சா.14 ஆகியோரின் சாட்சியத்தை வைத்து மட்டுமே அரசுத்தரப்பு எதிரிகளுக்கு எதிரான குற்றம் நிரூபணம் செய்ததாக கருத இயலாது என்றும், அரசுத்தரப்பு எதிரிகளுக்கு எதிராக சந்தேகத்திற்கு இடமின்றி வழக்கை நிரூபணம் செய்ய தவறியுள்ளது என தீர்மானித்து எதிரிக்கு இவ்வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை வழங்குவதே நீதியின் பால் உகந்ததே சரி என்று தீர்மானம் செய்கிறேன்.

***முடிவில், 1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 302 r/w 120(B), 148, 302, 506(2)ன் கீழும், 5 மற்றும் 6 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 302 r/w 120(B), 148, 302 ன் கீழும் குற்றவாளி அல்லர் என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும், எதிரிகள் ஏதேனும் பிணை முறிவு பத்திரம் எழுதி கொடுத்திருந்தால் இத்துடன் ரத்தாகிறது. இவ்வழக்கில் மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவிற்கு ஏற்பவோ அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின் இவ்வழக்கில் சா.பொ.1 முதல் சா.பொ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றுப்பொருட்களை அழிக்க உத்தரவிடப்படுகிறது.***

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P V SANDILYAN Digitally signed by P V SANDILYAN

**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**(விரைவு நீதிமன்றம்), வேலூர்.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:-**

| | |
|---|---|
| அ.த.சா.1 | திருமதி.ஆண்டாள் |
| அ.த.சா.2 | திரு.ரமேஷ் |
| அ.த.சா.3 | திரு.பாஸ்கர் |
| அ.த.சா.4 | திரு.குமரன் |
| அ.த.சா.5 | திரு.கணேசன் |
| அ.த.சா.6 | திரு.S.விஜயகுமார் |
| அ.த.சா.7 | திரு.அசோக் குமார், துணை இயக்குனர் (வட்டார தடய அறிவியல் ஆய்வகம், வேலூர்), |
| அ.த.சா.8 | திருமதி கலைச்செல்வி, (சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் மூத்த உதவி பேராசிரியராக மற்றும் தலைமை பொறுப்பு, வேலூர்) |
| அ.த.சா.9 | திருமதி.விஜயலட்சுமி, (அறிவியல் அலுவலர், தடய அறிவியல் துறை சென்னை), |
| அ.த.சா.10 | திரு.சதீஷ் |
| அ.த.சா.11 | அண்ணாதுரை (காவல் ஆய்வாளர், மாவட்ட குற்றப்பிரிவு, செங்கல்பட்டு), |
| அ.த.சா.12 | சாமுண்டீஸ்வரி |

| | |
|---|---|
| அ.த.சா.13 | சதாசிவம் |
| அ.த.சா.14 | அழகுராணி, காவல் ஆய்வாளர் |

<u>**அரசு தரப்பு சான்றாவணங்கள்**</u>:–

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | 21.04.2019 | பார்வை மகசர் |
| அ.த.சா.ஆ.2 | 20.04.2019 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.த.சா.ஆ.3 | 30.04.2019 | உடல்உள்ளுறுப்புக்கள் ஆய்வறிக்கை |
| அ.த.சா.ஆ.4 | 20.04.2019 | சடலக்கூராய்வு சான்று |
| அ.த.சா.ஆ.5 | 01.07.2019 | இறுதிக்கருத்துரை |
| அ.த.சா.ஆ.6 | 15.10.2019 | குறுதி வடிநீர் ஆய்வறிக்கை |
| அ.த.சா.ஆ.7 | 15.010.2019 | மாதிரி ரத்த வகை அறிக்கை |
| அ.த.சா.ஆ.8 | 20.04.2019 | புகார் |
| அ.த.சா.ஆ.9 | 20.04.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.10 | 21.04.2019 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.11 | 20.04.2019 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.த.சா.ஆ.12 | 21.04.2019 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.த.சா.ஆ.13 | 21.04.2019 | படிவம்–91 (இரத்தக்கரை படிந்த Blue colour jeans pant ஒன்று மற்றும் Blue colour அரைக்கை சட்டை ஒன்று) |
| அ.த.சா.ஆ.14 | 21.04.2019 | படிவம்–91(இரத்தம் தோய்ந்த கருப்பு கலர் ஜட்டி ஒன்று) |
| அ.த.சா.ஆ.15 | 24.04.2019 | 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி. |
| அ.த.சா.ஆ.16 | 24.04.2019 | கைப்பற்றுதல் மகசர் (1ம் எதிரி) |
| அ.த.சா.ஆ.17 | 24.04.2019 | 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி. |
| அ.த.சா.ஆ.18 | 24.04.2019 | கைப்பற்றுதல் மகசர் (2ம் எதிரி) |
| அ.த.சா.ஆ.19 | 24.04.2019 | 3ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் |

| | | |
|---|---|---|
| | | அனுமதிக்கப்பட்ட பகுதி. |
| அ.த.சா.ஆ.20 | 24.04.2019 | கைப்பற்றுதல் மகசர் (3ம் எதிரி) |
| அ.த.சா.ஆ.21 | 24.04.2019 | 4ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி. |
| அ.த.சா.ஆ.22 | 24.04.2019 | கைப்பற்றுதல் மகசர் (4ம் எதிரி) |
| அ.த.சா.ஆ.23 | 24.04.2019 | 5ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி. |
| அ.த.சா.ஆ.24 | 24.04.2019 | கைப்பற்றுதல் மகசர் (5ம் எதிரி) |
| அ.த.சா.ஆ.25 | 24.04.2019 | TVS Apache வண்டியின் புகைப்படம் |
| அ.த.சா.ஆ.26 | 24.04.2019 | Mahindra Pink TN 23 AH 7116 வண்டியின் புகைப்படம். |
| அ.த.சா.ஆ.27 | 24.08.2019 | வீச்சு (எ) தினேஷ் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி. |
| அ.த.சா.ஆ.28 | 20.01.2020 | சட்டப்பிரிவு மாறுதல்அறிக்கை |

<u>**அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்**</u>:–

| | |
|---|---|
| சா.பொ.1 | இரத்தம் தோய்ந்த சிமென்ட் காரை உடைத்த மண் சிறிதளவு |
| சா.பொ.2 | இரத்தம் தோய்ந்திராத சிமென்ட் காரை உடைத்த மண் சிறிதளவு |
| சா.பொ.3 | சம்பவயிடத்தில் படிந்திருந்த இரத்தத்தை பருத்தி பஞ்சில் துடைத்த மாதிரி |
| சா.பொ.4 | இரத்தக்கரை படிந்த புளூ கலர் ஜீன்ஸ்பேண்ட் ஒன்று |
| சா.பொ.5 | இரத்தக்கரை படிந்த லைட் புளூ கலர் அரைக்கை சர்ட் ஒன்று |
| சா.பொ.6 | இரத்தக்கரை படிந்த கருப்பு கலர் ஜட்டி ஒன்று |
| சா.பொ.7 | சுமார் 48 செ.மீ இரும்பு பகுதி 10 செ.மீ மரக்கைப்பிடி அதில் 1 1/2 செ.மீ பூண்கொண்ட கத்தி ஒன்று. |
| சா.பொ.8 | இரத்தக்கரை படிந்த கருநீல மஞ்சள் வெள்ளை பூ போட்ட அரைக்கை சட்டை ஒன்று. |
| சா.பொ.9 | கருப்பு மஞ்சள் வெள்ளை கட்டம் போட்ட முக்கால் பேண்ட் |

| | |
|---|---|
| | ரத்தக்கறை படிந்த நிலையில் ஒன்று. |
| சா.பொ.10 | கத்தி–1 கத்தியின் நீளம் சுமார் 50 செ.மீ மரத்தினால் ஆன புடி 10 செ.மீ. அதில் 1 1/2 செ.மீ பூண் உள்ளது. |
| சா.பொ.11 | சுமார் 50 செ.மீ நீளம் மற்றும் 2 செ.மீ உள் விட்டம் கொண்ட இரும்பு பைப் ஒன்று. |
| சா.பொ.12 | சுமார் 75 செ.மீ நீளம் 2 1/2 செ.மீ விட்டம் உள்ள இரும்பு பைப் ஒன்று மட்டும். |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:– இல்லை.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN

**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**(விரைவு நீதிமன்றம்), வேலூர்.**